# கனடாவில் 3,954 இலங்கையருக்கு அகதி அந்தஸ்து

(ஒட்டாவா)
கனடாவில் இலங்கையில் இருந்து சென்ற 3954 பேருக்கு மட்டும் கடந்த வருடம் அகதி கள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

20-3-1993

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 09 இதழ் 35
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22 03 1993

22-3-1993

## கிழக்கில் இராணுவம் மீது புலிகள் கடும் தாக்குதல்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீரக்குளம் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகச் சிறிலங்கா கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்பரப்பில் தொடர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
கிளாலிக் கடற்பரப்பில் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் துப்பாக்கிச்சூடுகளும் ஷெல் சத்தங்களும் அடிக்கடி கேட்டபடியிருந்தது.
நேற்று முன்தினம் இரவு கிளாலிக் கடலில் ஏற்பட்ட மோதலின் பின்னர் தொடர்

(4ம் பக்கம் பார்க்க)

★ புதிய விமானங்கள் வந்து சேர்ந்ததும்

# இராணுவ நடவடிக்கைகள்

# வட-கிழக்கில் முனைப்படையும்!

## பாதுகாப்பு வட்டாரம் தகவல்

(கொழும்பு)
புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட விமானங்கள் வந்து சேர்ந்ததும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் முனைப்படையலாமென்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

## கடமையின்போது 1,467 பொலிஸார் பலி

(கொழும்பு)
இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பித்த காலம் தொட்டு இன்று வரை 1467 பொலிசார் கடமையின் போது இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட 127 – வது ஆண்டு நிறைவு விழா நேற்று பம்பலபிட்டியில் நடைபெற்றது.
இவ்வைபவத்தில் இறந்த 1,467 பொலிஸாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.
(சு – ரி)

## படைக்கு ஆட்களைத் திரட்ட தொடர்ந்து தீவிர முயற்சி

(கொழும்பு)
பாரிய அளவில் தோல்விகளையும், இழப்புக்களையும் சந்தித்து வரும் இலங்கை ஆயுதப்படைக்கு ஆட்களைத் திரட்டும் நடவடிக்கைகளை தென்னிலங்கையில் பரந்தளவில் முடுக்கி விடப்பட்டுள்ளன வடபகுதியில் எந்நேரத்திலும் தாக்குதல்கள் ஆரம்பி

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு ஒதுக்கிய நிதியிலும் மோசடியாம்

(கொழும்பு)
பாதுகாப்பு படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு ஒதுக்கியுள்ள நிதியிலும் மோசடிகள் இடம்பெறுவதாக தெரியவருகிறது.
இந்நிதி உரிய முறையில்

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதி இடம்பெயர் சேவைக்கு முன்

## கிழக்கில் சிலஇடங்களை பிடிக்க படையினர் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதி இடம் பெயர் சேவை நடைபெற முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல சதுரமைல் பரப்புகளை தமது பூரணகட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதே சிறிலங்கா படையினரின் நோக்கம்.
இதற்காகவே இப்பகுதியில் அதிகளவு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
மட்டு மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாக அடுத்தடுத்து பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, தற்போது தொப்பிகல பகுதியில்

(4-ம் பக்கம்பார்க்க

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

(கொழும்பு)
அமைச்சரவையில் விரைவில் பல புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருக்கிறது.
இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில்,

4-ம் பக்கம் பார்க்க

## ஜே.வி.பி.யின் சொத்து 5 கோடி ரூபா பெறுமதி

(கொழும்பு)
ஜே. வி. பி. யிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துகளின் பெறுமதி 5 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
ஜே. வி. பி. யிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம், நகைகள் வீடுகள் போன்றவற்றை நீதிமன்றத்தின் அனுமதியுடன் பணமாக்கியபின் அதன்மூலம் கிடைத்த 5கோடி ரூபா தற்போது மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

4-ம் பக்கம் பார்க்க)

மாகாணசபைத் தேர்தல்:

## ஐ.தே.க. வடக்கு-கிழக்கில் போட்டியிடமாட்டாது

(கொழும்பு)
மாகாணசபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாண சபைகளில் ஐ.தே.க போட்டியிடுமென அறிவிக்கப்பட்டுள்ளது
நேற்றுமுன்தினம் கூடிய ஐ. தே. க. வின் செயற்குழு இந்த முடிவை மேற்கொண்டது.
இதன்படி ஏனைய மாகாண சபைத் தேர்தலில் தற்போதைய மாகாண சபை முதலமைச்சர்கள் உட்பட பலர் இத்தேர்தலில் போட்டியிடுவார்கள். பல புதிய முகங்களும் இத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(சி-ரி)

## பாதுகாப்பு தரப்பு பலம் குறைந்து வருகிறது

(கொழும்பு)
வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடரும் யுத்தத்தினால் பாதுகாப்பு படையினருக்கு ஏற்படும் இழப்புகள் அதிகரிக்க அதிகரிக்க பாதுகாப்பு படை தரப்பின் பலம் குறைந்துகொண்டே செல்கிறது என்று இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
இந்த யுத்தத்திற்கு தாக்குப்

(4-ம் பக்கம் பார்)

## ஈ.பி.டி.பி. ஐ.தே.க.விற்கு ஆதரவாக செயற்படும்

(கொழும்பு)
மாகாணசபை தேர்தலில் ஐ. தே. க. விற்கு ஈ.பி.டி.பி. ஆதரவளிக்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டது.
ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச்செயலாளர் திரு. டக்ளஸ் தேவானந்தா நேற்று கொழும்பில் இதனைத்தெரிவித்தார்.
வடபகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் படையினருக்கு உதவியாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் செயற்பட்டு வருவது தெரிந்ததே.
(ரி)

## அத்வானிக்கு கறுப்புக்கொடி சென்னையில் 200 பேர் கைது

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் ஆகியவற்றைச்சேர்ந்த 200 தொண்டர்கள் பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. எல். கே. அத்வானிக்கு கறுப்புக்கொடி காட்ட முயற்சித்ததாக சென்னையில் நேற்றும் கைது செய்யப்பட்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## போத்தல்கள் தேவை

ஜாம், பியர், கோடியல் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. Taste Line Industries (PVT) Ltd No-14, Seenier Lane, Jaffna.
(ஏ-2918)

## சேவை

ஸ்ரீ காந்தா அச்சகம் ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால் உங்கள் அவசர தேவைகள் எதுவானாலும் அழகுற செய்து கொள்வதற்கு நாடுங்கள். ஸ்ரீகாந்தா அச்சகம் - யாழ்ப்பாணம்.
(ஏ-2965)

## பயிற்சி

Basic. d Base III + Lotus 1, 2 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 87, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-2368)

## வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7260)

## நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7219)

## FOLLOW ME

ரெலிவிசன், வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கில பாட நிகழ்ச்சி தொடர்புத்தகம் வெளிவந்து விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை 16, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(ஏ-2956)

## சமையல்காரர் தேவை

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு முன்னுள்ள ரவி கோப்பி பாருக்கு சகல உணவுவகைகளையும் தயாரிக்கக்கூடிய நல்ல சமையலாளர்கள் தேவை. நேரில் வரவும். திறமையின் அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்க்கலாம்.
(ஏ- 2964)

## செயல் நூல் ஆண்டு-7

"வரலாறும் சமூகக்கல்வியும்" வெளிவந்து விட்டது 500 வினாவிடைகள், செயற்பாடுகளுக்கு விடைகள். நான்கு மாதிரி தவணைப் பரீட்சை வினாத்தாள் (முதலாம் தவணைக்கு இரண்டு) விடைகள் விலை ரூபா 32/- ஆக்கம்: நா. மயில்வாகனம் சென்ஜோன்ஸ் கல்லூரி.
சி-4023)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுற்று, சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் கி.இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(சி-7297)

## மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சயந்திரசாலை, கொக்குவில்.
(ஏ-2955)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

புதிய அனுமதிகள் 1991/92

(பௌதிக விஞ்ஞானம்)

### வெற்றிடங்களை நிரப்புதல்

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாணவர்களை பதிவு செய்யும் இறுதி நாள் 10-05-93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நேரில் வந்து பதிவு செய்ய முடியாதோர் தபால் மூலம் பதிவு செய்துகொள்ளலாம். இதுவரை பதிவு செய்யாதோர் உடன் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்.

பதிவாளர்.

(ஏ- 2971)

## University of Jaffna
## Tender Notice

Tenders invited from Contractors registered for Civil Engineering Works with University of Jaffna or ICTAD for "Improvement to fence along Western Boundary at Sports Complex"

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from1993-03-22-1993-03-24 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fees.

(a) Refundable
Rs. 1,500/-

(b) Non-Refundable
Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than10-00 a. m. on 1993-04-01.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR,
University of Jaffna.
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna. (A-2974)

## வேப்பம் பழுத்தல் இலை

துப்பரவான வேப்பம் பழுத்தல் இலை வாங்கப்படுகிறது. விலை: கிலோ ரூபா 2/- மில்க்வைற்.
(ஏ-2970)

## இயற்கை நுளம்புத்திரி

நோய் பல பரவிட நுளம்பே காரணம். இயற்கைச் சாதனம் கொண்டு தயாரான நுளம்புத்திரி மற்றொரு "மில்க்வைற்" தயாரிப்பு. பாவித்துப் பயன் காணுங்கள். தற்போது விற்பனையாகிறது —மில்க்வைற்"
(ஏ-2969)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1992/93 கல்வியாண்டிற்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்).

விண்ணப்பப் படிவங்களும், உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிநிலைப்பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 1993 மார்ச் 19-ந் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறுப்பணிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 ச மீ. அளவுடைய தபால்உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1991/92 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
11 03-1993. (ஏ-2975)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## கொக்குவில் மேற்கு — மணியர்பதி
## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
# மகோற்சவ கால தெய்வீகப் பேருரைகள்

காலம்:
**23-03-93 செவ்வாய் முதல்**
**01-04-93 வியாழன் வரை**
(10 தினங்கள்)

நேரம்:
இரவு 8-30 — 9 30 மணி வரை

பொருள்:
★ கந்தபுராணம் ★

நிகழ்த்துபவர்:
**திரு. த. சிவகுமாரன் அவர்கள்**
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(ஏ-2976) தேவஸ்தானம்.

## புறநிலைப்படிப்புகள் அலகு
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைத் தொடர்களையும் கற்கை நெறிகளையும் நடப்பாண்டில் நடாத்தவுள்ளது. வாரஇறுதி நாட்களில், பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள இவ் வகுப்புகளில் பங்குகொள்வோருக்கு கல்வித்தகைமைச் சான்றிதழ் எதுவும் தேவையில்லை. ஆர்வலர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து விபரங்களையும் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம் கற்கை நெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

1. பொது விரிவுரைகள்
   - 1. 1 உணவும் ஊட்டச்சத்தும் (Food and Nutrition)
   - 1. 2 தற்கால அனைத்துலக விவகாரங்கள் (Contemporary International Affairs)
   - 1. 3 ஈழத்தில் தமிழர் வரலாறு (The History of Tamils in Sri Lanka)
2. கற்கை நெறிகள் (குறைந்தது 36 மணித்தியாலங்கள்/நான்கு வாரம்)
   - 2. 1 சிறுதொழில் முயற்சிகள் (Enterpreneurships and small business)
   - 2. 2 தற்சார்புக் கிராமிய அபிவிருத்தி (Rural development and self reliance)
   - 2. 3 செயல்திட்ட செயல்முறைகள் (Project Planning Process)
   - 2. 4 பெண்களும் அபிவிருத்தியும் (Women and development)
   - 2. 5 பத்திரிகைக்கலை (Journalism)
   - 2. 6 உளவளத்துணை ஓர் அறிமுகம் (Intrduction to counselling)
   - 2. 7 வானியலும் சோதிடக்கலையும் (Astronomy and Astrology)
   - 2. 8 ஈழத்தில் நவீன தமிழ் ஆக்க இலக்கியங்கள் (Modern creative Tamil Literature in Sri Lanka)
   - 2. 9 தற்கால அரங்கியலும் நாடகமும் (Contemporary Drama and Theatre)

புலமை வளத்தினர் (Resource Persons)

மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமைவளத்தினராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் தங்கள் தகைமை விபரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப்படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி: 16-03 1993
புறநிலைப் படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணம். (ஏ 2973)

# அன்னை பூபதியால் இந்தியா உலக அரங்கில் தலைகுனிந்தது

(யாழ்ப்பாணம்)

இந்தியப் படை எம்மண்ணை ஆக்கிரமித்து, தமிழ் மக்களைச் சிறைப்பிடித்துச் சித்திரவதை செய்து கொன்றொழித்துக் கொடுமைகளை செய்தும் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கியும் ஒடுக்கிக் கொண்டிருந்த நேரத்தில் போர்க்கோலம் கொண்டு அன்னை பூபதி இதனை உலகிற்குக்காட்டும் முகமாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உண்ணா நோன்பு அனுஷ்டித்து வீர சுவர்க்கமடைந்த 5-ம் ஆண்டு நினைவு தினம் இப்பொழுது தமிழீழமெங்கும் வீடுகள், பொது நிறுவனங்கள், சந்திகள், பாடசாலைகள் என்று பல வேறு இடங்களில் படம் வைத்து, மலர் அஞ்சலி செய்து குத்து விளக்கேற்றி பொதுமக்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் கொண்டிருந்த கொள்கை உறுதிக்கும், அவருடைய ஆத்ம பலத்துக்கும் அன்று இந்திய இராணுவம் தோற்றுப்போய் விட்டது.

ஒரு சாதாரண குடும்பப் பெண்ணாக, தனி ஒருவராக அன்னை பூபதி பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யுத்தத்தை நிறுத்தி, விடுதலைப் புலிகளிடம் நியந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்துஎன்று இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து தமிழ் மக்களின் இன்னல்களை களைய ஏகோபித்த தாயாக உண்ணா நோன்பிருந்து தமது 58 ஆவது வயதில் அமரத்துவமடைந்தார்.

தமிழர் வரலாற்றிலேயே புதிய அத்தியாயம் படைத்துச் சென்ற தமிழீழ அன்னை 19 3 1988ல் அன்று உண்ணா நோன்பை ஆரம்பித்து 19-4-1988ல் தமிழரது போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு உணர்த்திவிட்டு, இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக இரண்டற ஒரு வெகுஜன சக்தியை உருவாக்கிவிட்டு எம்மைப் பிரிந்தார்.

அவருடைய கனவுகள் நிறைவேறதமிழரது போராட்டம் மேலும் முனைப்படைய தமிழீழ மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துகொள்வதே அன்னைக்கு நாம் செய்யும் மிக உயர்ந்த அஞ்சலியாக இருக்கும். (சு)

★ மாகாணசபை தேர்தல்

# 31 அரசியல் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படாமல் ஏனைய ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் திணைக்களத்தில் 31 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் 93 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான நியமனப் பத்திரங்கள்கோரும் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டதை அடுத்து அரசியல் கட்சிகள் யாவும் சுறுசுறுப்படைந்துள்ளதோடு தேர்தலில் போட்டியிட ஆர்வம் காட்டுகின்றன. (கே)

## இராசிபலன்

22-03-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு பங்குனி 09)

சதுர்த்தசி மு. ப. 11-18 வரை பூரட்டாதி பி. இ. 2-10 வரை, இராகுகாலம் காலை 7-47 முதல் 9-17 வரை சுபநேரம் நண்பகல் 12-17 முதல் 1-47 வரை அமாவாசை விரதம்.

மேஷம்: உறவினர் விரோதம், பணமுடை, வெறுப்பு.

இடபம்: மன மகிழ்ச்சி, அன்னையின் ஆசி, பணவரவு.

மிதுனம்: அதிக பொறுப்பு கலைத்துறை ஈடுபாடு, புகழ்.

கடகம்: மனக்கலக்கம் முதியோர் பகை, அலைச்சல்.

சிம்மம்: உறவினர் துன்பம், ஆரோக்கிய குறைவு, கவலை.

கன்னி: கடின உழைப்பு, பெரியவர் ஆதரவு, பயணம்.

துலாம்: நல்ல தகவல், பெரியஇடத்துஉதவியாகம்.

விருச்சிகம்: நண்பர் தொல்லை, தொழில் மந்தம், செலவு.

தனுசு: விவகாரங்கள் கவலை, ஏமாற்றம்.

மகரம்: தொழில் சிறப்பு, எதிர் பார்ப்புக்கள் நிறைவேறல், தானதர்மம்.

கும்பம்: விருந்துண்ணல், சிறு நஷ்டம். மேலதிகாரிகள் ஆதரவு.

மீனம்: நல்ல செய்தி,'காரிய வெற்றி இனசன வருகை.

ஜோதிடர்


சில்லாலை

அத்தனுசியார்பிரதமவைத்தியசாலை

14 - 03 - 1993 தொடக்கம்

124, ஆடியபாதம் வீதி, நல்லூர்.

(கல்வியங்காடு சந்தியிலிருந்து 100 மீற்றர்)

(S சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)

சிகிச்சை நேரம்:

காலை 7-00 மணி-1-00 மணி. பி.ப 3-30 மணி-6 00 மணி

(ஞாயிறு பி. ப. லீவு நாள்)

வைத்திய கலாநிதி எமில் அத்தனுசியார்

(கி-4019)


காங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணி புதுப்பிக்கப்படாது

# தமிழக காங்கிரஸ் தீர்மானம்

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை பொறுத்தமட்டில் காங்கிரஸ்- அ.தி.மு.க. கூட்டணி உறவு முறிந்து போய் விட்டதெனவும் இதுதான் தங்களின் இறுதியான முடிவு என்றும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றபோது இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்.

கூட்டணி உறவை ஒரு தரப்பாக முறித்துக்கொண்ட அ.தி.மு.க. தனது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டுமென தமது கட்சி வற்புறுத்தாது எனவும் கூட்டணிக்கு புத்துயிர் கொடுக்க காங்கிரஸ் தலைவர் திரு நரசிம்மராவ் வற்புறுத்தமாட்டாரென தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

கூட்டணி உறவுக்கு பாதகமான முறையில் எதுவும் செய்யவேண்டாமென தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. நரசிம்மராவ் கேட்டுக் கொண்டார் என்ற செய்தியையும் திரு. ராமமூர்த்தி மறுத்தார். கட்சித் தலைவரிடமிருந்து அப்படி எதுவித உத்தரவுகளும் வரவில்லை என்றும் அவர் கூறினார்.

பழனி நாடாளுமன்றதொகுதியிலும் ரானிப் பேட்டை சட்டப் பேரவை தொகுதியிலும் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் போட்டியிடுமெனவும் வாழப்பாடி கூறினார்.

தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறுகையில்: சட்டப்பேரவையில் தமது கட்சியினர் கருத்துக்களை சொல்ல சட்டப் பேரவைத் தலைவர் அனுமதிப்பதில்லை என்று கூறினார். சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் ஜனநாயக ரீதியில்செயற்பட அனுமதிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

இதற்குமுன் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கூட்டணி உறவை அ. தி. மு.க. முறித்துக் கொண்டது பற்றி தமிழக காங்கிரஸ் அறவே கவலை கொள்ளவில்லை எனவும் இந்தக் கூட்டணி இனியும் தொடர்வதற்கு எதுவித முயற்சியும் மேற்கொள்வதில்லையெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சிக்கு விடுக்கப்பட்ட சவாலை ஏற்று துடிப்புடன் செயற்பட்டு காங்கிரஸ் கட்சி தனது பாரம்பரியத்தை நிலை நாட்ட வேண்டுமெனவும் தீர்மானம் கூறியது. (கி)

## முற்பணம்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு எதிர் வரும் தமிழ் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு பண்டிகை முற்பணக் கடனாக 1,500 ரூபா வழங்கப்படவுள்ளது. (72)

## திருட்டு

(அரியாலை)

கடந்த 20-ந் திகதி இரவு 7 மணியளவில் திருநெல்வேலி சென்றல் நேர்சிங் ஹோம் மருத்துவமனையில் டாக்டர் ஒருவருடைய சைக்கிள் டைனமோ திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (59-கி)

# பீட்டர் அல்போன்சுக்கு மேலதிக பாதுகாப்பு

(சென்னை)

தமிழக சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படலாமென்ற அச்சம் எழுந்துள்ளதாம்.

இதனையடுத்து அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு காங்கிரஸ் கட்சியினர் காவல் துறையிடம் கேட்டுள்ளனர். இதனை ஏற்றுக் கொண்டு தமிழக காவல் துறையினர் அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கியுள்ளனராம்.

அண்மையில் திரு. பீட்டர் அல்போன்ஸ் சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியில் வைத்துத் தாக்கப்பட்டது தெரிந்ததே. (கி)

## தவக்கால நற்சிந்தனை

"தீமையல்ல நன்மையைத் தேடுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள். ஆண்டவரும் உங்களோடு இருப்பார்" (ஆமோஸ் 5 : 14)

ஆண்டவர் எம்மிடம் வேண்டுவது நன்மைசெய்யும் நெஞ்சையே. தீமை செய்பவன் தீயவனாக வேண்டும் என்பதல்ல, அவன் நல்லவனாக மாறவும்வேண்டும்என்றும் விரும்புகின்றார். ஆனால் நாம் இதனை எண்ணுகின்றோமா? என்றும் அவர் குரலுக்கு செவி சாய்த்து வாழ்வோம்.

மோ. தா.

## மலேசியா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுகவீனம் காரணமாக வைத்திய சிகிச்சை பெறுவதற்காக மலேசியா பயணமாகியுள்ளார். (59)


ஜாம், பியர், கோடியல், புரூடினக்ஸ் போத்தல்கள் சந்தை விலைக்குத் தொடர்ந்து கொள்வனவு செய்யப்படும்




TASTE LINE INDUSTRIES (PVT) Ltd

No: 14, சீனியர் ஒழுங்கை

(தட்டாதெருச்சந்திக்கு அருகாமை)

யாழ்ப்பாணம். (எ 2922)

# தமிழகத்தில் தேர்தல் நடந்தால் அ.தி.மு.க.வே வெற்றி பெறும்

## புள்ளி விபரக் கணக்கெடுப்பு தகவல்

(சென்னை)

தமிழகத்தில் தற்போது தேர்தல்கள் நடைபெற்றால், செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வே வெற்றி பெறும் என்று அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரிப் புள்ளி விபரத்துறை மாணவர்கள் 134 பேர், தமிழகத்தில் 450 கிராமங்களில் வாழும் வாக்காளர்கள் மத்தியில் இது தொடர்பான ஆய்வை நடத்தி இருந்தனர்.

தமிழக மக்கள் மத்தியில் இன்னமும் ஜெயலலிதாவுக்கு 36 வீதமான மக்களின் ஆதரவு உண்டு. இவர்களைத் தவிர 17 வீதமானோர் அவர் மீது நன்மதிப்பு வைத்திருக்கிறார்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு 34 வீதமான மக்களின் ஆதரவு உண்டு. இது தவிர 14 வீதமானோர் அவர் மீது நன்மதிப்பு வைத்துள்ளனர்கள். ஜெயலலிதாவை 40 வீதமான வாக்காளர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். கருணாநிதியை 44 வீதமான வாக்காளர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இப்போது தேர்தல் நடைபெற்றால் 35 வீதமானோர் அ.தி.மு.க.விற்கும் 34 வீதமானோர் தி.மு.க.விற்கும், 20 வீதமானோர் இ. காங்கிரஸிற்கும் வாக்களிப்பர். 91-ம் ஆண்டை விட 92-ல் அ.தி.மு.க. 8 வீத ஆதரவை இழந்துள்ளது. இந்த 8 வீதத்தை தி.மு.கவும், இ. காங்கிரசும் சரிசமமாகப்பெறுகிறது என்றும் அந்த புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# லண்டனில் குண்டுவெடிப்பு

## நால்வர் பலி; 100 பேர் காயம்

(லண்டன்)

பிரிட்டனில் நேற்று நிகழ்ந்த பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நாலுபேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

பிரிட்டனின் தலைநகரான லண்டனிலும், லிவப்பூலிலும் இருசக்திவாய்ந்த குண்டுகள் வெடித்ததில் நால்வர் கொல்லப்பட்டனர். பல கட்டிடங்கள் பலத்த சேதமடைந்ததுடன் வீதியால் சென்ற வாகனங்கள் பலவும் தூக்கி வீசப்பட்டன.

இக்குண்டு வெடிப்புக்கு ஐரிஷ் தீவிரவாதிகள்தான் காரணமென்று பொலிசார் தெரிவித்துள்ளனர். (வி)

# மீனவர் மீது துப்பாக்கிச்சூடு

## படகுபறிமுதல்; ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்முனை வெளிச்சக் கூட்டுக் கடலிலிருந்து 200 யார் தொலைவில் நேற்று முன்தினம் அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படகு ஒன்றையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் எடுத்துச் சென்றதுடன் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

இக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது மூன்று மீனவர்கள் கடலில் குதித்து நீந்தத்தொடங்கினர். இதில் இருவர் கரையைவந்தடைந்தனர். நாவாந்துறையை சேர்ந்த ஆபிரகாம் (வயது 44) என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டவராவார். (ரி)

# பி.ஜே.பி.க்கும் அ.தி.மு.க.வுக்கும் நல்லுறவு நிலவுகிறது

## — அத்வானி

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சிக்கும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கும் பெருமளவு நல்லெண்ணம் நிலவுவதாகவும், நாடாளுமன்றத்தில் ஒருவித உடன்பாடு உண்டென்றும் பாரதீய ஜனதாகட்சியின் மூத்த தலைவர் திரு. எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

இந்திரா காங்கிரஸ்கட்சியுடனான கூட்டுறவை அ.தி.மு.க. முறித்துக்கொண்டது பாரதீய ஜனதா கட்சிக்கு சாதகமாக அமைந்துள்ளதென்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இரு கட்சிகளுக்குமிடையே நிலவும் நல்லெண்ணம் காலப்போக்கில் வலுப்படுமென்றும் கூட்டணி குறித்து அவசரப்படுத்த தேவையில்லையென்றும் அத்வானி கருத்துத்தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் கூட்டணி முறிந்ததில் மாநில அளவில் மட்டுமல்ல தேசிய அளவில் காங்கிரஸ் கட்சிக்கு பலத்த அடியென்றும் குறிப்பிட்டுள்ளார். (சு)

### புதிய விமானக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது குண்டுவீச்சுக்களில் இரண்டு புக்காரா விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மூன்றாவது விமானம் சென்ற வாரம் கொழும்பு வந்துள்ளது. மேலும் ஒரு விமானம் இந்த மாதம் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் ரஷ்ய தயாரிப்பான எம். ஐ. 8 ரக ஹெலிகொப்டரும் இன்னும் சில தினங்களில் கொழும்பு வந்து சேரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய பெல் ரக ஹெலிகளை விட எம். ஐ. 8 ரக ஹெலிகளில் கூடுதலாக படையினரையும் தளபாடங்களையும் ஏற்றிச் செல்லமுடியும்.

சகல புக்காரா விமானங்களும் எம். ஐ. 8 ரக ஹெலிகளும் வந்து சேர்ந்ததும் பாரிய அளவில் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும் என சிறிலங்கா இராணுவ தரப்பு அறிவித்துள்ளது. (மி)

### ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை மேலும் பல புதிய இராணுவ நடவடிக்கைகள் புதிய பெயர்களில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படலாமெனவும் கொழும்பு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (ரி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலை அடுத்து இரு பகுதியினருக்குமிடையே கடும் மோதல்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றித் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (மி)

### ஊரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியாக படையினர் தாக்குதல் நடவடிக்கையை கடற்பரப்பில் மேற்கொண்டபடி இருந்தனர்.

வலிவடக்குப்பகுதி படை முகாமிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினமிரவு ஷெல்த் தாக்குதல்களை நடாத்தியபடி இருந்தனர். (56)

### படைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படலாம், என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடக்கின் முக்கிய யுத்த நிலைகளுக்கு மேலதிக படைகளை அனுப்புவதற்காகவும் ஏற்கனவேயுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகவுமே இந்தஆட்சேர்ப்பு நடவடிக்கை என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறினார். (ரி)

### அத்வானிக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 45 தொண்டர்களும், பட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த 150 உறுப்பினர்களும் இதில் அடங்குவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று சென்னை கடற்கரையில் இடம்பெற்ற பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுக்கூட்டத்துக்கு சென்னை முழுவதும் தீவிர பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-மி)

# மாகாணசபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மாகாணசபை தேர்தல் காலங்களிலும் அதன் பின்னரும் வன்செயல்கள் இடம்பெறலாம் என அஞ்சப்படுகிறது.

இதனையடுத்து மாகாண சபை தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தல் முடிந்து இருவாரங்களுக்கும் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான உத்தரவுகளை பொலிஸ்மா அதிபர் மாகாண பொலிஸ் காரியாலயங்களுக்கு அறிவித்துள்ளார். (கே-ரி)

# மேல்மாகாண முதல்வராக சந்திரிகா வர எதிர்ப்பு

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிரணியினர் வெற்றிபெற்று மேல் மாகாண முதலமைச்சராக திருமதி சந்திரிகா வருவதை அவர் சகோதரன் அனுரா தீவிரமாக எதிர்த்து வருகிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா, ஐ. தே. முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியை எதிர்க்கட்சி கூட்டணியான பொதுமக்கள் கூட்டணியில் சேருமாறு வலியுறுத்தியுள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் பதவிக்கு திருமதி சந்திரிகாவை சுதந்திரக்கட்சி நிறுத்த எடுத்த முடிவைமாற்றவும் அவருக்கு எதிராக திரு. அத்துலத் முதலியை நிறுத்தவுமே திரு. அநுரா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். (கே-மி)

# மீன் கறி உண்ட ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மீன்கறி உண்ட ஐவர் மயங்கிய நிலையில் யாழ். பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் வீதி அச்செழு வடக்கைச் சேர்ந்த வி. காண்டீபன் (13வயது), வி. கஜன் (7 வயது), எம். திலகவதி (28 வயது), கே. தவமணி (60 வயது), கே. வடிவேல் (42 வயது) ஆகியோரே நேற்றுமுன்தினம் மதியம் சோற்றுடன் மீன்கறி உண்ட பின்னர் ஏற்பட்ட மயக்கத்தினால் இரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். (56-ரி)

### பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க முடியாதவர்கள் என்பதைத்தான் படையினர் சந்தித்து வருகின்ற இழப்புகள் தெளிவுபடுத்துகின்றன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டம் வகுப்பவர்களிடையே இராணுவத்தில் நம்பிக்கை இழந்து விட்டதாக தெரியவருகிறது. வெல்ல முடியாத யுத்தம் ஒன்றில் படையினர் தமது உயிர்களை தினமும் இழந்து வருகிறார்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

### கனடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டில் மட்டும் 4134 இலங்கை அகதிகளின் விண்ணப்பங்கள் கனடா அரசினால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள 4883 இலங்கை அகதிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கு கனடா குடிவரவுத் திணைக்களத்திற்கு 30 கோடி டாலர் செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி ஒருவருக்கு 30 ஆயிரம் டாலர் வரை செலவு செய்யவேண்டி ஏற்படுமென்று கனடா குடிவரவுத் திணைக்களப் பேச்சாளர் பியன்கா பெட்ரன்ட் தெரிவித்துள்ளார். (மி)

# சர்வஜன வாக்கெடுப்பு வரை ரஷ்யாவை ஆளப்போவதாக

## பொறிஸ் யெல்ஸின் அறிவிப்பு

(மாஸ்கோ)

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும்வரை ரஷ்யாவை தானே நேரடியாக ஆட்சி செய்யப் போவதாக ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ஸின் நேற்று தெரிவித்ததை அடுத்து ரஷ்யா நாடாளுமன்றத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபரின் இந்த திடீர் அறிவித்தலைத் தொடர்ந்து ரஷ்யாவின் பல நகரங்களில் ஆதரவாகவும் எதிராகவும் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதேநேரம், ரஷ்ய அதிபர் யெல்ஸினின் மேற்படி அறிவித்தலுக்கு அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் தமது ஆதரவை தெரிவித்துள்ளன. (மி)

### ஜே. வி. பி.யின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணம் அவசரகாலச் சட்ட விதிகளின்படி, ஜே. வி. பி.யில் இருந்து சரணடைந்த இளைஞர்களின் புனர்வாழ்வுக்கும், நஷ்டஈடு வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (மி)

### அமைச்சரவையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போது முக்கிய அமைச்சுக்களில் உள்ள பல அமைச்சர்கள் நீக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது. இதேவேளை அமைச்சரவையில் சர்ச்சைக்குரிய சில புதிய முகங்களும் தோன்றலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி-ரி)

### படையினருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவு செய்யப்படவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

அம்புலன்ஸ் வண்டிகள், இரவில் பார்க்கக்கூடிய கண்ணாடிகள், சிகரெட்டுகள், சீருடைத்துணிகள் மற்றும் பல வகை உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ஒதுக்கப்பட்ட பெருந்தொகையான நிதியிலே இம்மோசடி இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. (ரி)

# 800 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு, 800 சிறைக் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கியுள்ளது. (சு)

# வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கறுக்காய் வெட்டை பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் மகாலிங்கம் அல்லது மயூரன் (சிவராஜா-திலகராஜ காளிகோவிலடி, சாவகச்சேரி) என்ற விடுதலைப் புலிகள் இயக்க போராளி வீரச்சாவு அடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10336/B